மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு ஜூன் திங்கள் 03ம் நாள் சனிக்கிழமை

இ.ம.எண்.03/2023
உள்
அசல் வழக்கு எண்.99/2015
-------------

எஸ்.சுப்புராஜ் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

தமிழக அரசுக்காக அதன்
விருதுநகர் மாவட்ட ஆட்சியர்
மூலமாக மற்றும் 3 நபர்கள் ... எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 23.02.2023ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 28.04.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.மைக்கேல்பாரதி அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.சந்திரசேகர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு மனுவுரைகளை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், இருதரப்பு வாதுரைக்காக போடப்பட்டுள்ள அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு 1வது சாட்சியை குறுக்குவிசாரணை செய்வதற்காக அசல் வழக்கை ரீ-ஓபன் செய்து உத்தரவிடுமாறு 09.02.2023ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

வாதி தரப்பு சாட்சியங்கள் முடிந்து பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் வாதி தரப்பு மூத்த வழக்கறிஞர் கொடும் சாலை விபத்தில் படுகாயம் அடைந்து தொடர் மருத்துவ கண்காணிப்பிலும், மருத்துவ பரிசோதனைகளாலும் அவருக்கு ஏற்பட்ட படுகாயத்தின் காரணமாக மருத்துவரின் ஆலோசனையின்படி முழு ஓய்விலும் இருக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டது. இச்சூழலில் பிரதிவாதிகள் தரப்பு 1வது சாட்சியை 03.1.2022ம் தேதி குறுக்குவிசாரணை செய்ய வேண்டிய நிலையில், எதிர்பாராத விதமாக மனுதாரர் தரப்பு மூத்த வழக்கறிஞர் கட்டாய மருத்துவ பரிசோதனைக்கு செல்ல வேண்டியிருந்ததால் அன்றைய தினம் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய இயலாமல் போய்விட்டது. பிரதிவாதி தரப்பு 1வது சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய இயலாத செயல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமான செயலாகும். இந்நிலையில் கடந்த 27.01.2023ம் தேதி பிரதிவாதிகளும் தங்கள் தரப்பில் சாட்சிகள் இல்லையென கூறி பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை முடித்துக் கொண்டனர். அதன்காரணமாக தற்போது மேற்கண்ட அசல் வழக்கானது இருதரப்பு வாதங்களுக்காக தற்போது வாய்தா ஏற்பட்டுள்ளது. வாதங்களுக்காக போடப்பட்டுள்ள அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சியை குறுக்குவிசாரணை செய்வதற்காக முடிவுற்ற பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணை செய்ய அசல் வழக்கை மீண்டும் ரீ-ஓபன் செய்து பிரதிவாதி தரப்பு சாட்சியை குறுக்குவிசாரணை செய்தால் மட்டுமே மனுதாரர் தரப்பு நியாயத்தையும் வழக்கில் மனுதாரருக்கு உள்ள சாதகங்களையும் பிரதிவாதிகளின் சட்டவிரோத செயல்களையும் மனுதாரரால் நிரூபிக்க இயலும். தவறும்பட்சத்தில் வாதியான மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத இழப்புகளும், சொல்லொண்ணா துயரங்களும் அனேக கஷ்ட நஷ்டங்களும் ஏற்படக்கூடும் என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**3). 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்:-**

மனுதாரர் கூறியுள்ள சங்கதிகள் சிலவற்றை தவிர மற்ற சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பான பொய்யான சங்கதிகளாகும். அசல் வழக்கானது கடந்த 2015ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டதாகும். மேற்படி அசல் வழக்கானது விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டதாகும். அசல் வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியங்கள் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மூத்த வழக்கறிஞர் அவர்களுக்கு கொடும் சாலை விபத்தில் படுகாயம் அடைந்து தொடர் மருத்துவ கண்காணிப்பில் மருத்துவ பரிசோதனை இருந்ததாகவும், அதனால் 03.11.2022ம் தேதியில் பிரதிவாதியான 1வது சாட்சியை குறுக்குவிசாரணை செய்யவில்லை என்றும், அதனால் 1வது சாட்சியை மீண்டும் அழைக்க கோருவது ஏற்றுக்கொள்ளக் கூடியதில்லை. மனுதாரர் மூத்த வழக்கறிஞர் அவர்களுக்கு உடல்நிலை சரியில்லை என்றும், அதனால் குறுக்குவிசாரணை செய்ய இயலவில்லை என்று கூறி சாட்சியை மீண்டும் அழைக்க கோரியுள்ளது ஏற்கும்படியாக இல்லை. இதுபோன்ற காரணங்களைக் கூறி மனு தாக்கல் செய்வதற்கு மனுதாரருக்கு எந்த முகாந்திரமும் இல்லை.

தாவா மனுவில் கண்ட மனுதாரர் இந்திய இராணுவ பணியாளர் ஆவார். ஆனால் எதிர்மனுதாரர் மூத்த குடிமகன் மற்றும் அரசு அலுவலர்கள் ஆவார்கள். மனுதாரர் சுமார் 8 ஆண்டுகளாக இதுபோன்ற தேவையற்ற் மனுவை தாக்கல் செய்து வழக்குகளை காலதாமதம் செய்து வருகிறார். அதனால் மனுதாரர் மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாகும் என்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**4). 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-**

மனுதாரரின் வழக்கறிஞர் சாலை விபத்தில் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வந்ததாக கண்டுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும்.

03.11.2022ம் தேதியில் குறுக்குவிசாரணைக்கு வாய்தா ஏற்பட்டதாக கண்டுள்ள சங்கதியை எதிர்மனுதாரர்களால் மறுக்கப்படுகிறது. உண்மையில் மேற்படி வழக்கில் 3, 4 பிரதிவாதிகள் பக்கம் 1வது சாட்சியாக 4ம் பிரதிவாதி சுப்பிரமணியன் 07.09.2022ம் தேதியில் முதல்விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்குவிசாரணைக்காக 13.09.2022, 27.09.2022, 11.10.2022, 14.10.2022, 26.10.2022, 30.10.2022 மற்றும் 03.11.2022ம் தேதிகளில் வாய்தா ஏற்பட்டு இருந்த நிலையில் உண்மையை மறைத்து 03.11.2022ம் தேதியில் பி.வா.சா.1ஐ குறுக்குவிசாரணை செய்ய வாய்தா ஏற்பட்டதாக கூறி மனு தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். மேற்படி வழக்கு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்ட நிலையில் காலதாமதப்படுத்தும் எண்ணத்துடன் செயல்பட்டு மனுதாரர் உண்மையை மறைத்து மனு தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகம் என்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6). இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

7). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

<u>**8). தீர்வு:-**</u>

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் இருதரப்பு வாதுரைக்காக போடப்பட்டுள்ள அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு 1வது சாட்சியை குறுக்குவிசாரணை செய்வதற்காக அசல் வழக்கை ரீ-ஓபன் செய்து உத்தரவிடுமாறு 09.02.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரரால்

தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டத்திற்கும் ஆளாகக் கூடும். தனது தரப்பை நிரூபணம் செய்வதற்கு மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமாய் உள்ளது. எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து இருப்பினும் இந்த வழக்கில் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரையம் மற்றும் இதர விரையங்களை கருத்திற்கொண்டு மனுதாரர் பி.வா.சா.1க்கு ரூ.300/-ஐ செலவு தொகையாக வரும் 09.06.2023ம் தேதியன்றோ அதற்கு முன்பாகவோ செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா-09.06.2023

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு இருதரப்பு வாதுரைக்காக போடப்பட்டுள்ள அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு 1வது சாட்சியை குறுக்குவிசாரணை செய்வதற்காக அசல் வழக்கை ரீ-ஓபன் செய்து உத்தரவிடுமாறு 09.02.2023ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து மனுதாரர் பி.வா.சா.1க்கு ரூ.300/-ஐ செலவு தொகையாக வரும் 09.06.2023ம் தேதியன்றோ அதற்கு முன்பாகவோ செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா-09.06.2023

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஜூன் திங்கள் 03ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதார்/பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி

சாத்தூர்.